23rd November 1963]

unless there are important questions. Either they may be printed in the Official Proceedings or they may be answered but there may be no supplementary questions. Otherwise, it will take more than half an hour.

MR. DEPUTY SPEAKER : I will do that.

காலரா நோய் (திண்டிவனம் வட்டம்)

*516 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் திண்டிவனம் வட்டம் கூச்சிக்கொளத்தூரில் காலராவினால் இறந்தவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களில் திண்டிவனம் அரசாங்க மருத்துவ மனையில் இறந்தவர்கள் எத்தனை பேர்?

(உ) மேற்படி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட காலரா கண்ட பெண்கள் உடல்நலம் சரியாவதற்கு முன்பே லேடி டாக்டரால் வெளியே அனுப்பப்பட்டது உண்மையா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) 9.

(இ) 4.

(உ) இல்லை.

திரு. ஆ. தங்கவேலு : கனம் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு இறந்தவர்கள் அனேகம் பேர்கள் பெண்களாக இருப்பதால், அந்த மருத்துவ மனையில் இருந்த லேடி டாக்டரின் கவனக்குறைவினாலும், சரியான முறையில் சிகிச்சை செய்யப்படாததினாலும் தான் என்று சொல்லப்படுகிறது. ஆகவே இனிமேலாவது லேடி டாக்டர் சரியானபடி சிகிச்சை செய்ய வேண்டும் என்று அரசாங்கம் எச்சரிக்கை செய்யுமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இங்கு அனுமதிக்கப்பட்ட நோயாளிகள் பூரணமாக குணமடைந்துதான் போயிருக்கிறார்கள். இதற்கான சிகிச்சையும் நல்ல முறையில்தான் செய்திருக்கிறார்கள். எபிடாமிஜிக்கல் வான் மூலமாக மருந்துகள் கொண்டு போய் சிகிச்சை செய்திருக்கிறார்கள். அங்கு ஏற்பட்ட நோயை தக்க முறையில் சிகிச்சை செய்திருக்கிறார்கள். ஆகவே லேடி டாக்டர் பேரில் எந்தக் குறையும் சொல்வதற்கில்லை.

Village works (grants)

*517 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to allot funds to the Panchayat Union Councils under 'Local Roads Grants' and 'Village Works Grant' taking into consideration (i) their area and (ii) the number of Panchayats they have under their control?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இல்லை.

[23rd November 1963

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார், தற்போது ஜனத் தொகை அடிப்படையில் நிதி ஒதுக்கப்படுகிறது. சில பஞ்சாயத்துகளில் விஸ்தீர்ணம் குறைவாகவும், சில பஞ்சாயத்துகளில் விஸ்தீர்ணம் கூடுதலாகவும் இருக்கின்றன. ஆதலால் ஜனத் தொகையின் அடிப்படையில் ஒதுக்கப்படும் நிதி போதிய அளவுக்கு பயன்படுவதில்லை. ஆகவே ஜனத்தொகையை கணக்கிடாமல், விஸ்தீர்ணத்தின் அடிப்படையில் உதவி அளிக்க அரசாங்கம் முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : நாம் இப்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மத்தியில் இருக்கிறோம். இந்தச் சமயத்தில் மாறுதல் செய்வது உசிதம் அல்ல.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மகாநாட்டிலும், மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களிலும் இப்படிப்பட்ட முறையில் அதாவது மக்கள் தொகையை அடிப்படையாக வைத்துக்கொண்டு உதவி செய்வது போதாது என்று விவாதித்திருக்கிறார்கள். மேலும் அரசாங்கம் ஒதுக்குகின்ற வில்லேஜ் வொர்க்ஸ் கிராண்டிலிருந்து தொகை மிகுந்தால் அதை எடுத்துக்கொள்ளலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பாதியளவுக்கு நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே இந்தப் பணத்தை டைவர்ஷன் செய்வதற்கு பஞ்சாயத்து யூனியனுக்கு தனியாக ஏதாவது அதிகாரம் கொடுக்கப்படுமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இப்போது அம்மாதிரி அரசாங்கம் ஒன்றும் செய்வதற்கில்லை.

Kanapattom lands (abolition of special rights)

* 518 *Q.*—Sri M. WILLIAM : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to bring in a legislation for the abolition of special rights on Kanapattom lands in the Kanyakumari district on the lines of the Kerala Act; and

(*b*) whether there is any proposal to enact legislation abolishing Thiruppuvarom and Monuiom Karam on lands in the Kanyakumari district?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) & (*b*) : Proposals for the abolition of Janmikaram payment, the tenure of Sripandaravagai lands and Thiruppuvarom are under the active consideration of the Government and the necessary legislation is expected to be undertaken shortly.